**தனம்கடுவ பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தமன்கடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவை நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 500,000 தொகை நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்காக அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி இடையே ரூபா 152,135,811 தொகையான விளக்கமளிக்கப்படாத வித்தியாமொன்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான தனியார் கம்பனி ஒன்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,870,710 தொகைக்கான மணல் கொண்டு செல்லல் அனுமதிப்பத்திர வருமானம் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 363,243 இற்கான செலுத்த வேண்டிய 14 விலைப்பட்டியல்களுக்கான செலவுகள் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நான்கு சில்லு டிரக்டர் வண்டி ஒன்றின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள் களஞ்சியத்தின் பெறுமதியாகிய ரூபா 1,608,393 தொகை குப்பை மீள்சுழற்சி அலகினை நவீனமயப்படுத்தலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,236,420 தொகை மற்றும் பொலன்னருவ சுற்றுவட்டத்தின் அருகில் கடைகளுடன் கூடிய வர்த்தக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 5,586,371 தொகை ஆகிய செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 108,528,944 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 22,591,067 தொகை 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வரப்படும் மீதிகளாகும். மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த

வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,326,213 தொகை பெறுமதியில் 05 வருடங்களை விட மிகைத்த ரூபா 2,045,936 மீதியொன்றும் அடங்கியிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) | பிரிவு 132(ஒ) | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி 12 சந்தர்ப்பங்களில் சட்டரீதியாக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாத விடயங்களுக்காக ரூபா 317,405 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) | 150(1), 152(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகள் | கைத்தொழில்கள், வர்த்தகங்கள், திறந்தொழில் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக அட்டவணை வருமானப் பரிசோதகர் வருமான நிருவாகி அல்லது தலைவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்டு, ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | சுற்றறிக்கைகளும் கடிதங்களும் | |
| | 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறை கடை வாடகைகளை திருத்தி அமைக்க வேண்டும். சபைக்குச் சொந்தமான 240 கடைகள் தொடர்பாக அதன்படி செயற்படாமல் அடிப்படையொன்று கடைபிடிக்கப்படாமல் வாடகை அறவிடப்பட்டிருந்தது. 2008 ஆண்டின் போது இறுதியாக கடை வாடகை திருத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,972,672 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,278,191 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 கடை வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் கேள்வியினை ஏற்றுக்கொண்ட நாள் முதல் 14 நாட்களுள் ஒரே தடவை செலுத்தும் பணம் செலுத்தி முடிவடைய வேண்டும். எனினும், 28 கடைகளில் இருந்து அவ்வாறு பெற வேண்டிய ரூபா 1,673,991 இற்கான தொகை 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கடை வாடகையை செலுத்தாத சந்தர்ப்பத்தில் வாடகை உடன்படிக்கையை இரத்து செய்து குறிப்பிட்ட கடைகளை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், அவ்வாறு செய்யப்படாத கடைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 737,523 இற்கான கடை வாடகை 04 வருடங்கள் முதல் அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) பொலன்னறுவை வைத்தியசாலை சந்தியில் காணப்படும் சபைக்குச் சொந்தமான 36 கடைகளின் வாடகை உடன்படிக்கை 20 வருடங்களை கடந்திருந்ததுடன் அக்கடைகளுக்காக புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கதுருவெல பஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் இரண்டு கடைகளின் ஆரம்ப வாடகையாளரினால் சபையின் அங்கீகாரம் இன்றி துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு கடைகளில் உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு அல்லது துணை வாடகை தொடர்பாக வாடகையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையான நிதிஏற்பாடுகள் வரிசை அமைச்சில் இருந்து பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட செயற்திட்டங்களை அமுல் நடத்துவதற்காக சபைக்கு இயலாதிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 1,034,287 தொகையான மூன்று வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீதி பல வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) சபையின் வருமானம் சேகரிக்கும் 15 அலுவலர்களுக்கு 2013 முதல் 2015 இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்டிருந்த 29 பற்றுச்சீட்டு புத்தகங்களின் அடிக்கட்டைகள் 2016 மார்ச் 15 திகதி வரை திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் அந்த நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் அலுவலர்களுக்கு தொடர்ந்து புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தது. அதே போல் சபைக்கு வெளியே வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள 05 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த 9 பற்றுச்சீட்டுப் புத்தகங்களை திருப்பி பெற்றிருக்கவில்லை.

(ஈ) 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்ட கதுருவெல நகர மத்தியில் அமைந்திருந்த காணித்துண்டு ஒன்று 02 வருட காலத்திற்காக வாடகைக்கு கொடுப்பதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் அக்காணியை வாடகைக்கு கொடுக்காமல் இரத்துச்செய்து குறிப்பிட்ட கேள்விக் கட்டணத்தை திருப்பி செலுத்தியிருந்தது.

(உ) ரூபா 35,000 தொகை மாதாந்த வாடகைக்கு பெற்றிருந்த சபைக்குச் சொந்தமான கட்டிடத்திற்குப் பதிலாக புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றி 03 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கப்படாமையால் சபைக்கு மாதாந்தம் உழைக்கக் கூடியதாகவிருந்த பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

## 3.2 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

முன்னைய ஆண்டுகள் தொடர்பான ரூபா 19,638,834 இற்கான 04 நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதிகள் சபை அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 9-10 தொன் குப்பையினை சபையினை சபையின் தொழிலாளர்கள் மற்றும் டிரக்டர்களை பயன்படுத்தி கல்லேல்லவில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சுமார் 05 ஏக்கர் காணியில் குவிக்கப்படுகின்றன. அவ்வாறு சேகரமாகும் குப்பைகளில் 4.8 சதவீதம் சேதனப்பசளை உற்பத்திக்கும் 1.2 சதவீதம் மீள்சுழற்சிற்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது. மீதியான குப்பை முற்றாக அந்த காணியில் திறந்த நிலையில் காணப்படுவதால் சபை முறையான திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை எனவும் அதன் மூலம் பாரிய சுற்றாடல் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் அவ்வாறு திறந்த நிலையில் குவிக்கப்படுவதால் குப்பைகளை மூடுவதற்கு மீளாய்வாண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் ரூபா 1,377,160 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீ அணைக்கும் அலகில் அடிப்படை தீ அணைக்கும் படையினர் 3 உம், பொறியியல் படையில் 15 பேரும் ஆக 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 22 அலுவலர்கள் முறையான அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர். சபையின் கடமை விடயங்களுக்கு தேவையான பதவியணியினை சரியாக இனங்கண்டு அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஊழியர் சேர்த்தல் மற்றும் கடமையில் ஈடுபடுத்தல் என்பன முறையான செயல்முறை ஒன்றின் படி நடைபெற்றிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடையும் இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

## 4.2 உள்ளக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு விடயங்களுக்காக ரூபா 127,948,668 தொகை வருமானம் மற்றும் ரூபா 98,975,999 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை ஒன்று நடத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று அமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009(1) கொண்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தியிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) விளைவற்ற மற்றும் குவைாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ரூபா 12,851,871 தொகை பெறுமதியான 08 சொத்து விடயங்கள் 2 முதல் 20 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

#### (ஆ) வருடாந்த கணிப்பீடு

1988 பிரதேச சபை விதிக் கோவையின் 218 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் சபையினால் அவ்வாறான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (இ) வெளிசாராரினால் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ரூபா 738,000 தொகை பெறுமதியான கல்தபராவ நூலகக் கட்டிடத்தில் கட்டணம் ஏதும் அறவிடப்படாமல் தமன்கடுவ பிரதேச செயலகத்திற்கு சேவை இல்லம் ஒன்று நடத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது.

#### (ஈ) உரித்தாக்கப்படாத சொத்துக்கள் முறைசாரா விதமாக பயன்படுத்துதல்

(i) நிதிக்கூற்றுக்களில் காணிகள் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 76 காணித் துண்டுகளுக்காக பிரதேச சபையின் பேரில் காணி உறுதி அல்லது உரிமை சான்றிதழ் பெற்று உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபை பயன்படுத்தப்படும் 6 வாகனங்கள் பதிவுச் சான்றிதழ் சபையின் பெயரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 12 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தினால் பெற்றுக்கொள்ள வேண்டிய அரசாங்க காணிகள் பற்றி சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) வாகன நிருவாகம்